செ.வெ.எண்:26/ஏப்ரல்/2019 நாள்:14.04.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், வருகின்ற 18.4.2019 அன்று ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகின்றது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு, இ.ஆ.ப., அவர்களின் தகவல்**

---

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தல் வருகின்ற 18.04.2019 அன்று அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகிறது .

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி பாராளுமன்ற பொது தேர்தல்-2019 ஏப்ரல் 18-ம் தேதியன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெறுகிறது. பாராளுமன்ற பொது தேர்தலை முன்னிட்டு அனைத்து தனியார் நிறவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் ஊதியத்துடன் கூடிய பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகிறது. அவ்வாறு விடுமுறை விட தவறும் அல்லது ஊதியம் கொடுக்க தவறும் நிறுவனங்களின் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.சு.சிவராசு, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:

14/4/2019

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.